# அண்ணாந்து பாருங்கள்!

என்ன!..... குழந்தைகளே அண்ணாந்து பார்த்து கழுத்து வலிக்கிறதா? என்னை நன்றாகப் பார்த்தீர்களா!.? சரி விசயத்திற்கு வருகிறேன். நான் தான் வானம் பேசுகிறேன். என்னை ஆகாயம் என்றும், தமிழ் இலக்கியத்தில் விசும்பு என்றும் அழைப்பர்.

என்னில் கோடிக்கணக்கான அதிசயங்கள் காணப்படுகின்றன. உலகத்துக்கெல்லாம் ஒரே போர்வை?... அது யார் தெரியுமா! ம்ம்..... சரியாகச் சொன்னீர்கள், அது நான் தான்.

சரி என்னை மட்டுமல்ல என் நண்பர்களையும் உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன்.

இவர்தான் சூரியன். இவருக்கும் கதிரவன், ஞாயிறு, ஆதவன் எனப் பல பெயர்கள் உண்டு.

இவர் தினமும் காலை கிழக்கில் உதித்து மாலை மேற்கில் மறைவார். சூரியன் மறைந்தவுடன் தோன்றுபவர் சந்திரன். குழந்தைகளுக்கு நிலா என்றால் தான் தெரியும் . நிலாவினைப் பற்றிப் பாடாத கவிஞர்களே இல்லையெனலாம்.

நீங்கள் கடற்கரைக்குச் செல்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டால் அதிகாலையில் சூரியன் உதிப்பதையும், இரவில் நிலா தோன்றுவதையும் கண்டு மகிழுங்கள். நிலவை மட்டுமல்லாமல் நட்சத்திர ஒளியையும் கண்டு குதுகலியுங்கள்.

ஆங்காங்கே திரள் திரளாக காணப்படுபவை மேகங்கள். மேகங்கள் தான் மழைப்பொழிவுக்குக் காரணம்.

டம!... டம!. டம!.. (இடி இடித்தல்)

என்னாயிற்று! ஓ! இடி அண்ணன் வந்துவிட்டாரா?... சரி தான். இனி மின்னல் தம்பியும் வந்துவிடுவார்.

சட்... சட்.. சட் (மழை பொழிதல்)

சரி குழந்தைகளே மழையில் நனைந்து விடாதீர்கள். வீட்டிற்குச் செல்லுங்கள். நான் வருகின்றேன். என்ன!.... என்னை அழைத்தீர்களா? ஓ! வானவில்லா! மழை நின்றதும் அவர் வருவார்.

**பயிற்சிகள்:**

1. **விடையளி**

   1. குழந்தைகளிடம் பேசுபவர் யார்?

   2. வானத்தின் பிற பெயர்களைக் குறிப்பிடு.

   3. குழந்தைகள் சந்திரனை எப்படி அழைக்கின்றனர்?

   4. இடியும் மழையும் எத்தகைய ஒலியுடன் வெளிப்பட்டது?

   5. வானத்தின் நண்பர்களைக் கூறு.

2. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**

   1. சூரியன் உதிக்கும் திசை ______________________

   2. திரள் திரளாக காணப்படுபவை ______________________

   3. சூரியன் மறைந்தவுடன் தோன்றுபவர் ______________________

**3. பொருத்துக.**

விசும்பு _ சந்திரன்

கதிரவன் _ மேற்கு

நிலா _ வானம்

மறையும் திசை _ சூரியன்

1. **திறன் அறிதல்:**

கடற்கரைக்குச் சென்ற அனுபவத்தை எழுது.

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________